# திருக்குடும்ப விழா

## மூன்றாம் ஆண்டு 30-12-2012

# ஆன்மீகம் நிறைந்த குடும்பங்கள்!

## திருப்பலி முன்னுரை:

இறையேசுவில் இனிய சகோதரர்களே சகோதரிகளே நண்பர்களே, மகிமை மிகு இப் பெருவிழாவில் மனமுவந்து உங்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று திருக்குடும்ப விழாவைக் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு குடும்பமும் ஆண்டவர் இயேசுவின் ஆசிபெற்ற குடும்பமாக விளங்க இன்று சிறப்பாக மன்றாடுவோம். குடும்பங்கள் பலவிதமான சிக்கல்களைச் சந்திப்பதை இன்று பார்க்கிறோம். மண முறிவுகள், பிளவுகள், ஊடகங்களின் தாக்கத்தால் அறநெறிச் சிக்கல்கள் போன்றவை குடும்பத்தின் ஆணி வேரையே அசைத்துப் பார்க்கின்றன. திருமணம் செய்யாமல், குடும்ப வாழ்வுக்குள் நுழையாமல் விருப்பம்போல் வாழலாம் என்னும் மனநிலை மெல்ல, மெல்ல பரவி வருகிறது. எனவே, குடும்பங்களை உறுதிப்படுத்தும் பணியை நாம் அக்கறையுடன் ஆற்றவேண்டும். குடும்பங்கள் ஆன்மீகம் நிறைந்தவையாகத் திகழ்ந்தால்தான், இன்றைய சவால்களைச் சந்திக்க முடியும். இந்த குடும்பங்களின் ஆன்மீகம் இறைநம்பிக்கை, நற்பணி, நல்லுறவு, நற்செய்தி அறிவிப்பு என்னும் நான்கு தளங்களில் கட்டப்பட வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் நாள்தோறும் செபித்து, இறைவார்த்தையின்படி, அருள்சாதனங்களில் பங்கேற்று வாழ்வதே இறைநம்பிக்கையின் வெளிப்பாடு. தங்கள் கடமைகளை நேர்மையுடனும், கடமையுணர்வுடனும் நேர்த்தியாக ஆற்றுவது நற்பணியின் வெளிப்பாடு. பல்வேறு விதமான உறவுகளில் பாராட்டு, மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல், இழத்தல் போன்ற பண்புகளில் வளர்வது உறவின் வெளிப்பாடு. இறுதியாக, திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் நற்செய்தி அறிவிக்கும் கடமையுடையவர்கள் என்னும் நிலையில், தங்களால் இயன்ற விதத்தில் நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழ்வது நற்செய்தி அறிவிப்புப் பணியின் வெளிப்பாடு. இந்த நான்கு தளங்களிலும் நிறைவு பெறும் குடும்பங்களே ஆன்மீகம் நிறைந்த குடும்பங்களாக விளங்க முடியும். இந்த நாளில் நமது குடும்பங்கள் அனைத்தும் இத்தகைய ஆன்மீக குடும்பங்களாகத் திகழ இறைவனிடம் வரம் கேட்டுச் செபிப்போம். இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## இறைமக்களின் வேண்டல்கள்:

ஆண்டவர் இயேசுவின் அருள் வாக்கு உங்கள் வாழ்வில் விளக்காக இருந்து வெளிச்சம் தந்து, செல்வங்கள் அனைத்தும் தந்து உங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வதாக. இயேசுவின் அன்பு, மகிழ்ச்சி, சமாதானம் என்றும் உங்களோடு இருப்பதாக.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

இறைவா!
மகிழ்ச்சியின் மன்னர்களாக நாங்கள் வாழ விசுவாசத்தில் ஒழுக்கத்தில் எங்களை வழிநடத்த செபித்து செயல்பட்டு கொண்டிருக்கும் எம் திருச்சபையின் தலைவர்களுக்காக வேண்டுகிறோம். பாப்பரசர், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர்கள், வேதியர்கள் இவர்களை நீர் ஆசீர்வதிக்கவும் உடல் நலத்தையும், மனபலத்தையும் தந்திடவும் உம்மை மன்றாடுகிறோம்.

அனைத்துக் குடும்பங்களின் தந்தையே இறைவா,
உம்மைப் போற்றுகிறோம். எங்கள் குடும்பங்களை ஆசிர்வதியும். எல்லாக் குடும்பங்களும் இயேசு, சூசை, மரியா போன்ற திருக்குடும்பங்களாக வாழ அருள்தாரும். எங்கள் குடும்பங்களில் நாங்கள் இறைநம்பிக்கை, நற்பணி, நல்லுறவு, நற்செய்தி அறிவிப்பு என்னும் நான்கு தளங்களிலும் நிறைவாக வாழ எமக்கு வரம் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பே உருவான ஆண்டவரே,
எங்கள் உள்ளத்திலும் வாழ்விலும் நேர்மை விளங்கச் செய்தருள வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

நிறைவாழ்வை வாக்களிக்கும் தந்தையே!
இன்றைய நாட்களிலே குடும்பத்தின் புனிதத் தன்மைக்கும், உறவுக்கும், ஒற்றுமைக்கும் எதிராக இருக்கும் எல்லாச் சக்திகளையும் முறியடித்து: குடும்பங்களிலே அன்பும், ஒற்றுமையும், தோழமையும், புரிந்துணர்வும் நிலைபெற்று: குடும்பங்கள் திருக்குடும்பத்தின் தன்மைகளைக் கொண்டு வாழ அருளாசீர் அளித்திடவேண்டுமென்றும்: பிரிந்திருக்கும் குடும்பங்களை ஒன்று சேர்த்திடவேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அவனியில் அவதரித்த அன்பு இறைவா!
எங்கள் ஒவ்வொருடைய உள்ளத்திலும் அவதரித்து அன்பு, அமைதி, சமாதானம் போன்ற புண்ணியங்களை எங்களுக்கு பொழிந்தருள வேண்டுமாய், இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

மனிதனாக அவதரித்த மாபரனின் தந்தையே!
எல்லா மக்களையும் ஆசிர்வதிக்க உம்மை கேட்கிறோம். பிரிந்து சென்ற சகோதரர்கள் திரும்பி வரவும் உம்மை அறியாத மக்கள் அறிந்து கொள்ள முன்வரவும் உம்மில் நம்பிக்கை இல்லாதவர் நம்பிக்கை கொள்ளவும் செய்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நலன்களின் அருட்கடலே எம் இறைவா!
உண்மையான மகிழ்ச்சி என்னவென்று கூறும் இறைவாக்கிற்கேற்ப உம் மக்களாகிய நாங்கள் வளர வாழ உம் அருளைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.